

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் மேற்கு ஒன்றியம் கோவிந்தாபுரம் ஊராட்சி மற்றும் சின்னப்புத்தூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிகுழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் வேல்மாறன். இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில விவசாய அணி தலைவராக உள்ளார். கடந்த சில மாதங்களாக வேல்மாறன் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தார். இந்நிலையில் நேற்று அவர் இறந்தார் இது பற்றி தகவல் அறிந்த கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சருமான பொன்முடி வேல்மாறன் உடலுக்கு வீரபாண்டி கிராமத்திற்கு நேரில் சென்று மலர்வளையம் அமைத்து அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரது குடும்பத்துக்கு ஆறுதலும் கூறினார். இந்த நிகழ்வில் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் ரவிச்சந்திரன், பிரபு, லூயிஸ், முருகன், மணிவண்ணன், சக்தி சிவன், வெங்கட், ஐயப்பன், ராஜசேகர், ராமச்சந்திரன், பிரகாஷ், கணேசன், குணா, சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

### ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வுடன்

# காங்கிரஸ் ரகசியக் கூட்டணி அமைத்து சதிச் செயல்களில் ஈடுபட்டுள்ளது!

## கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் குற்றச்சாட்டு!

திருச்சூர், ஜூலை 19-

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.கவுடன் காங்கிரஸ் ரகசிய கூட்டணி அமைத்து சதிச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் குற்றம் சாட்டி உள்ளார்.



திருச்சூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பினராயி விஜயன், கேரள வக்ஃப் வாரிய மறு சீரமைப்பு விவகாரத்தில், பா.ஜ.க.வுக்கு ஆதரவாகவும், ஆர்.எஸ்.எஸ் மற்றும் சங் பரிவார அமைப்புகளின் விருப்பத்திற்கு ஏற்பவும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிவளைந்துகொடுப்பதாக குற்றம்சாட்டினார்.

காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளின் கொள்கைகளுக்கு எதிராக வலுவான நிலைப்பாட்டை எடுக்காமல், மென்மையான இந்துத்துவா அரசியலை காங்கிரஸ் கையில் எடுத்துள்ளதாகவும் அவர் விமர்சித்தார்.

அண்மையில் கேரளத்தில் நடைபெற்ற தேர்தல்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்கடிப்பதற்காக காங்கிரஸ், மற்றும் பா.ஜ.க ஒன்றிணைந்து ரகசியக் கூட்டணியை உருவாக்கிச் செயல்பட்டதாகவும் பினராயி விஜயன் குற்றம்சாட்டினார்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கே.சுதாகரன், மார்க்சிஸ்ட் கட்சியினரிடம் இருந்து ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஷாகாக்களை பாதுகாத்ததாக அவரே பகிரங்கமாக ஒப்புக்கொண்டதையும் பினராயி விஜயன் சுட்டிக் காட்டினார்.

### மாதவரம் 16, 19வது வட்டங்களில் ரூபாய் 3.50 கோடி செலவில் அமைக்கப்படவிருந்த

# மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தம் ரத்து செய்த த.வெ.க. அரசு!

## புழல் எம்.நாராயணன் கண்டனம்! - மழைக்கால நிவாரண மையக் கட்டிடம் தொடர்ந்து அமைக்க ஒப்பந்தம் கோர வலியுறுத்தல்!

மாதவரம், ஜூலை 19-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி வார்டு எண்கள் 16 மற்றும் 19 இல் பொதுமக்கள் மழைக்காலத்தில் சந்திக்கும் பேரிடர்களை களைய ரூபாய் 3.50 கோடி செலவில் கட்டப்படவிருந்த மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்ததை நிறுத்தி வைத்து மீண்டும் பணிகளை துவக்க கோரி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடம் திமுகவினர் மனு அளித்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 16 மற்றும் 19வது வார்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் அறிவார்ந்த ஆலோசனையின் பேரில் 16 வது வார்டுக்கு உட்பட்ட கன்னியம்மன் பேட்டை, கன்னியம்மன் பேட்டை 2, சத்திரமேடு, கடப்பாக்கம், காமராஜபுரம், ஆண்டார்குப்பம், துவாரகா நகர், குளக்கரை, மணலி புதுநகர், எலந்தனூர், சடையங்குப்பம், பர்மா நகர், இருளர் காலனி ஆகிய பகுதிகளிலும் 19வது வட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மழைக்காலங்களில் பேரிடர்கள் ஏற்படும் நேரத்தில் மழை நீர் சூழ்ந்து பாதிக்கப்படும் மக்களை தங்க வைப்பதற்காகவும் அவர்களுக்கு என்று உணவு தயாரிப்பதற்காகவும் தனியாக மழை கால நிவாரண மையங்கள் அமைக்க ரூபாய் 3.50 கோடி செலவில் கட்டுமான பணிகள் துவங்கப்பட திராவிட மாடல் அரசில் ஒப்பந்தம் விடப்பட்டது.

பணிகள் துவங்குகின்ற நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தினால் பொதுமக்களின் நலனில் சிறிது மக்கள இல்லாமல் இப்பொழுது நடைபெறுகின்ற இந்த அரசு மேற்படி மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தங்களை ரத்து செய்துள்ளதாக அறிகிறோம். நாமும் விசாரித்த வகையில் திராவிட மாடல் ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதால் அதை ரத்து செய்தது உண்மை என்று தெரிகிறது.

வார்டு 16 மற்றும் 19 பகுதிகளில் அடங்கிய கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்கள் ஏழ்மை நிலையிலும் தினசரி வேலை செய்து பிழைப்பு நடத்தக் கூடிய நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள். மழை வெள்ள காலங்களில் எப்பொழுதெல்லாம் இந்த பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்களோ அப்பொழுதெல்லாம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்த அன்பு அண்ணன் தளபதி அவர்கள் நேரடியாக வருகை தந்து இந்த பகுதி மக்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்து அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தார். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மேற்படி பதினாறாவது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் நேரடியாக வருகை தந்து பேரிடர் காலங்களில் நிவாரண உதவிகளை வழங்கினார். அதன் அடிப்படையில் தான் மழைக்காலங்களில் பாதிக்கப்படும்போது அவர்களுக்கென உணவு தயாரிக்க குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் மகளிர்கள் தங்குவதற்காக நிவாரணம் ஐயா கட்டிடங்கள் கட்ட உத்தரவிட்டிருந்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடன் இப்பணிகளை துவங்காமல் ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்ததை அறிந்து நாங்கள் அதிர்ச்சியுற்றோம். பொது மக்களின் நலனில் அக்கறையோடு துவங்கப்பட்ட இந்த திட்டம் முடக்கப்படுவதை திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் நாங்கள் வன்மையாக கண்டிப்பதோடு இந்த பணிகள் உடனடியாக துவங்க தாங்கள் ஆவண செய்ய வேண்டும் என்றும் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று மழைக்கால நிவாரண மையங்கள் அமைக்கப்படும் பட்சத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளும் அவர்களின் தேவைகளும் மழைக்காலத்தில் பூர்த்தி ஆகும் என்பதையும் வலியுறுத்தி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலர் திரு பத்மநாபன் அவர்களை நேரில் சந்தித்து நிறுத்தப்பட்ட ஒப்பந்தத்தினை மீண்டும் ஒப்பந்தம் கோரி மழைக்கால நிவாரண மையங்கள் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை மனுவை அளித்தார். 19-வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், சடையங்குப்பம் முன்னால் கிராம செயலாளர் நைனியப்பன் உடன் இருந்தார். மேற்படி மனுவின் மீது நடவடிக்கை எடுத்து உடனடியாக பணிகள் துவங்க பரிசீலிப்பதாக மண்டல அலுவலர் உறுதி அளித்தார்.



கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் தளபதி அவர்களின் திராவிட மாடல் அரசில் மாதவரம் சட்டமன்ற தொகுதி 16 மற்றும் 19வது வட்டங்களில் ரூபாய் 3.50 கோடி அளவில் அமைக்கப்பட இருந்த மழைக்கால நிவாரண மையத்திற்கான பணிகளை மீண்டும் துவக்க வலியுறுத்தி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் பெருநகர சென்னை மாநகராட்சி மணலி மண்டல அலுவலர் அவர்களிடம் கோரிக்கை மனுவை வழங்கினார்.


### விஜய் ஆட்சியில் - ‘டாஸ்மாக்’ கடைகளில்

# 54 வகை உயர்ரக மது கிடைக்க ஏற்பாடு! இதுதான் மாற்றமா?

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் கேள்வி!

திருவனந்தபுரம், ஜூலை 19-

மேட்டூர் அணை திறப்பு எப்போது? என்று ஏங்கி தவிக்க டாஸ்மாக் கடையில் 54 வகை உயர் ரக மது கிடைக்க ஏற்பாடு. இது தான் மாற்றமா? என கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் கேள்வி? எழுப்பியுள்ளார்.



கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழக விவசாயிகள் கடந்த 5 ஆண்டுகளாக எந்த விதமான தடைகள் இன்றி முன்னாள் தமிழக முதல்வர் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி தேதி மாறாமல் மேட்டூர் அணை திறக்கப் பட்டது அதனால் பல்லாயிரக்கணக்கான விவசாய பெருங்குடி மக்கள் விவசாயம் செய்து செல்வச் செழிப்போடு இருந்து வந்தனர்.

ஆனால் இன்று தமிழ் நாட்டில் ஒரு தரித்திரம் தலைமையிலான மூன்று கால்கள் கொண்ட ஆட்சி அமைந்தது முதல் கடந்த 5 ஆண்டுகளாக வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த ஆட்சி ரிவர்ஸ் கியர் போட்டு கடந்த 60 நாட்களுக்குள் ளாகவே 5 வருடம் பின்னோக்கி சென்று விட்டது. இந்த மாற்றம் தான் தமிழக மக்கள் எதிர்பார்த்தார்களா?

இன்று தங்கள் வாழ்வாதாரம் மொத்தமாக முடங்கி விட்டதே என்று டெல்டா விவசாயிகள் கவலையடைந்துள்ளதைப்பற்றி துளியும் கவலைப் படாமல் தற்குறி அரசு தமிழக குடிமகன்கள் கோரிக்கையை ஏற்று 54 வெளிநாட்டு மற்றும் வெளிமாநில உயர் ரக மதுபானங்கள் டாஸ்மாக் கடைகளில் கிடைக்க ஏற்பாடு செய்து அறிவிப்பு வெளியீடு என்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வேலையாகும்.

அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து டெல்டா விவசாயிகள் கேட்கும் நீர் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# “கழகத்தின் வேர்களைத் தேடி” - கிளைக் கழக நிர்வாகிகளை நேரில் சந்திக்கும் சிறப்பு நிகழ்வு!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், “கழகத்தின் வேர்களைத் தேடி” என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை அவர்களது பகுதிகளிலேயே நேரில் சந்தித்து கலந்துரையாடல் சிறப்பு நிகழ்வு நடைபெற உள்ளது. திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் கிளைக் கழக நிர்வாகிகளை, அந்தந்த கிளைக் கழக நிர்வாகிகளின் இல்லங்களிலேயே சந்தித்து உரையாடும் இந்நிகழ்ச்சி, கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது

| தேதி | நிர்வாகம் | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|
| 22-07-2026 | திருத்தணி தெற்கு ஒன்றிய | கே.ராஜேந்திரன், |
| 23-07-2026 | பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | சி.ஜெ.சீனிவாசன் |
| 24-07-2026 | ஆர்கே பேட்டை வடக்கு ஒன்றியம் | சி.என்.சண்முகம் |
| 25-07-2026 | திருத்தணி மேற்கு ஒன்றியம் | என்.கிருஷ்ணன் |
| 27-07-2026 | ஆர்கே பேட்டை கிழக்கு ஒன்றியம் | பா.சம்பத் |
| 28-07-2026 | பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் | பி.டி.சந்திரன் |
| 29-07-2026 | திருத்தணி வடக்கு ஒன்றியம் | ஏ.எல்.விஜயகுமார் |
| 30-07-2026 | ஆர்கே பேட்டை தெற்கு ஒன்றியம் | பெ.பழனி |
| 31-07-2026 | பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் | ஜி.ரவீந்திரா |
| 01-08-2026 | திருத்தணி கிழக்கு ஒன்றியம் | பா.ஆர்த்தி ரவி |
| 03-08-2026 | ஆர்கே பேட்டை மேற்கு ஒன்றியம் | மா.இரகு |
| 04-08-2026 | பள்ளிப்பட்டு பேரூர் | சி.ஜெ.செந்தில் குமார் |
| 05-08-2026 | பொதட்டூர்பேட்டை பேரூர் | டி.ஆர்.கே.பாபு |
| 06-08-2026 | திருத்தணி நகரம் | வி.வினோத் குமார் |
| 07-08-2026 | கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | கே.அரிகிருஷ்ணன் |
| 08-08-2026 | திருவலாங்காடு மேற்கு ஒன்றியம் | கூளுர் எம்.ராஜேந்திரன் |
| 10-08-2026 | பூண்டி மேற்கு ஒன்றியம் | டி.மோதிலால் |
| 11-08-2026 | கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் | மோ.ரமேஷ் |
| 12-08-2026 | திருவலாங்காடு கிழக்கு ஒன்றியம் | எஸ்.மகாலிங்கம் |
| 13-08-2026 | திருவள்ளூர் நகரம் | சி.சு.ரவிச்சந்திரன் |
| 14-08-2026 | கடம்பத்தூர் மத்திய ஒன்றியம் | பிரகாஷ் ஞான ஒலி |

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பாக மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இந்நிகழ்வில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட கழக அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டரணி பயிற்சியாளர் மாஸ்டர் இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர்.

**திருத்தணி எஸ்.சந்திரன்,**

செயலாளர் - திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.